## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 179/2019

நாள் 25.03.2026

DW 4 – முருகசாமி

த/பெ – கொமரசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of March 2026)**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 8ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவேண்டி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் அழைத்ததின் பேரில்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதியை எனக்கு 2011ம் ஆண்டு முதல் தெரியும், 4, 5 பிரதிவாதிகளை எனக்கு 20 ஆண்டுகாலமாக தெரியும். வாதி இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 2ல் சொல்லியுள்ள நாகப்ப முதலியார் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. அந்த நாகப்பமுதலியாரை யார் என்றே எனக்கு தெரியாத நிலையில் சொத்து அவருடைய வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் தயார் செய்து வைத்திருந்த பிரமாண வாக்குமூலத்தில் நான் கையொப்பம் மட்டும் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த நாகப்ப முதலியாரின் வாரிசுகள் யார் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. கே.என்.கருப்பசாமி என்பவரை நான் பார்த்ததே இல்லை. குமார் சொல்லிதான் அவருடைய அப்பா என்று எனக்கு தெரியும். அவ்வாறு குமார் சொல்லிதான் அவருடைய அப்பா கருப்பசாமி என்ற விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 3ல் சொல்லப்பட்டுள்ள பாகப்பிரிவினை பற்றிய விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் குமார் சொல்லிதான் 1ம் பிரதிவாதி குமார் சொல்லிதான் எனக்கு தெரியும். அவ்வாறு 1ம் பிரதிவாதி சொல்லிதான் பாகப்பிரிவினை குறித்த விவரம் எனக்கு தெரியும் என்ற விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு 1ம் பிரதிவாதி குமாரை யார் என்றே தெரியாது என்றும், 4, 5 பிரதிவாதிகள் சொல்லிதான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 1, 2, 3 பாராக்களில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி குமார் பெருமாநல்லூர் கொண்டத்து காளியம்மன் கோவிலுக்குரிய இடத்தில் ஹோட்டல் வைத்து நடத்தி வந்தார். அந்த ஹோட்டலுக்கு நான் சாப்பிட சென்றபோது குமார் அந்த விவரங்களை எனக்கு சொன்னார். அந்த ஹோட்டல் தற்போது இல்லை. அந்த ஹோட்டலை கோவில் ஆக்கிரமிப்பில் அகற்றி விட்டார்கள். அந்த ஹோட்டலை கடந்த 3 வருடத்திற்கு முன்புதான் அகற்றினார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 4ல் 2010ம் ஆண்டில் 4,5 பிரதிவாதிகள் தாவா கட்டிடத்தில் வாடகைக்கு இருந்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அந்த வாடகை ஒப்பந்தத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் வாடகை ஒப்பந்தத்தை நான் பார்க்கவில்லை.

ஆனால் அந்த துணிக்கடைக்கு சென்று வருவேன். தாவா சொத்தை பொறுத்து யார் யாருடன் சேர்ந்து கிரைய ஒப்பந்தம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. அதேபோல் கிரைய ஒப்பந்தம் எவ்வளவு தொகைக்கு போடப்பட்டது என்றும், அதை எப்போது ரத்து செய்யப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலம் பாரா 4ல் சொல்லியுள்ள ரூ.5,50,000/-ஐ சின்னசாமி எந்த தேதியில் கொடுத்தார் என்ற விவரம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல சின்னசாமி எந்த ஒரு தொகையையும் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கொடுத்தது கிடையாது என்றும், ஆனால் நான் 4, 5 பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சின்னசாமி பணத்தை கொடுத்ததாக அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீன அனுபவமானது 5ம் பிரதிவாதி வசம் இல்லை என்றும், 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் வாதி வசம்தான் உள்ளது என்றும், அந்த கடைகளை 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் வாடகைக்கு விட்டு வாடகை வசூலித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 1ல் சொல்லப்பட்டுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா கடைக்கு 4ம் பிரதிவாதி எப்போது வாடகைக்கு வந்தார் என்றால் 2010ம் ஆண்டில் வந்தார். அப்போது அவர்களுக்குள் வாடகை ஒப்பந்தம் ஏதேனும் போட்டுக்கொண்டாரா அல்லது தாவா சொத்தை விலைக்கு

வாங்கிக்கொண்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாகப்பமுதலியார் சொத்துக்கள் ஏதேனும் வாங்கினாரா என்றால் அந்த நாகப்பமுதலியாரையே எனக்கு தெரியாது. கே.என்.கருப்பசாமி என்பவர் 1999ம் வருடம் இறந்துபோய்விட்டார் என்பதற்கு அவருடைய இறப்பு சான்றிதழை பார்த்தேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 1, 2 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாமல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. எனது பிரமாண வாக்குமூலம் பாரா 3ல் சொல்லப்பட்டுள்ள பாகசாசனத்தை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். அந்த பாகசாசனத்தில் என்ன விஸ்தீரணம் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அந்த பாக சாசனத்தின் சொத்துக்கள் யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் போக வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. எனது பிரமாண வாக்குமூலம் பாரா 4ல் வழக்கு சொத்தில் ஒரு பகுதியை இந்த வழக்கின் 4, 5 பிரதிவாதிகள் 2010ம் வருடம் வாடகைக்கு எடுத்து அதில் எம்.எம். குளோத்திங் என்ற பெயரில் துணிக்கடை வைத்து நடத்தி வந்தார்கள் என்று சொல்லியுள்ள அந்த கடையின் விஸ்தீரணம் என்ன என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கடை கட்டிடம் ஓடு வேயப்பட்டதா, தார்சு கட்டிடமா என்றால் அதை நான் பார்க்கவில்லை, அந்த கடையின் மேலே தெர்மாகோலால் வேயப்பட்டிருந்தது. பாகசாசனத்தில் கடை கட்டிடமானது தார்சு கட்டிடமா அல்லது ஓடு வேயப்பட்ட கட்டிடமா என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்று எனக்கு தெரியாது. கடை நடத்த லைசென்ஸ் வாங்கியிருந்தாரா என்று எனக்கு தெரியாது. லைசென்ஸ் வாங்க வேண்டி

வாடகை ஒப்பந்தம் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியாது.

3. 4ம் பிரதிவாதி சின்னசாமி எனக்கு நண்பர் என்றால் பழக்கமானவர். 2011ம் வருடம் வாடகை ஒப்பந்த பத்திரத்தை பதிவு செய்ய வேண்டும் என்றும், அதில் சாட்சி கையொப்பம் செய்ய வேண்டும் என்று சொல்லி 4ம் பிரதிவாதி என்னை அழைத்ததின் பேரில்தான் நான் சென்றேன் என்று சொன்னால் சரியல்ல, பொது அதிகாரபத்திரத்தில்தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். அந்த சாட்சி கையொப்பத்தை எந்த தேதியில் போட்டேன் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. அந்த பொது அதிகார ஆவணத்தில் என்னென்ன ஷரத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. அதனால் அந்த ஆவணம் வாடகை ஒப்பந்த பத்திரமா அல்லது பொது அதிகார பத்திரமா என்று எனக்கு தெரியாது என்றால் பொது அதிகார பத்திரம் என்று எழுதப்பட்ட ஆவணத்தில்தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் வாடகை ஒப்பந்த பத்திரம் தயாரித்து படித்துக் காண்பிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் வாடகை ஒப்பந்த பத்திரம் என்று சொல்லி நானும், 4ம் பிரதிவாதி சின்னசாமியும் சேர்ந்து மோசடியாக பொது அதிகாரப்பத்திரத்தை போலியாக எழுதி கையொப்பம் பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அப்போது வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் வாடகை ஒப்பந்த பத்திரம்தான் என்று சொல்லப்பட்டது என்றும், அந்த நம்பிக்கையின் பேரில்தான் வாதியும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் வா.சா.ஆ.9 பொது அதிகார ஆவணத்தில் கையொப்பம் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

4. பொது அதிகாரப்பத்திரம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. அன்றைய தினம் யார் யார் அவிநாசி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்திருந்தார்கள் என்றால் நானும், 4 ம் பிரதிவாதி சின்னசாமி, வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் சித்தப்பாவும் வந்திருந்தோம். அப்போது சொத்தை விற்று பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று யார் சொன்னார் என்றால் 1ம் பிரதிவாதி குமார் சொன்னார். அதற்கு வாதியும், 2, 3 பிரதிவாதிகளும் அனுமதி கொடுத்தார்கள். அவ்வாறு சொத்தை விற்று எடுத்துக்கொள்ளுமாறு பொது அதிகார பத்திரத்தில் சொல்லப்பட்டிருந்ததா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த பொது அதிகாரப்பத்திரத்தின் பேரில் 4ம் பிரதிவாதி சின்னசாமி சொத்தை யாருக்கேனும் விற்பனை செய்தாரா என்றால் இல்லை. சொத்தை விற்காமல் பணம் எப்படி கொடுத்தார்கள் என்றால் அது அவர்களுக்கிடையே சம்பந்தப்பட்டது அதனால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. பி.வா.சா.ஆ.8 ரசீதில் பாரா 3ல் எங்களில் 1 லக்கமிட்டவருக்கு பிதுரார்ஜித வகையிலும், 2 முதல் 4 நபர்களுக்கு பிதுரார்ஜித வகையிலும், வாரிசு முறைப்படியும் மற்றும் 11.04.2004ம் தேதி அவிநாசி சார்பதிவக 1 புத்தகம் 663/2004 நெம்பர் பாககறார் பத்திரப்படி ஏ ஷெட்யூல் சொத்தாக பதியப்பட்டதும், அதுமுதல் நாங்கள் சர்வசுதந்திரமாய் நிராச்சைபாணையாக ஆண்டு அனுபவித்து வருகின்றதுமான சொத்துக்களை விற்பனை செய்து விட்டு அதற்குண்டான தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டேன் என்பதற்கு இதுவே ரசீது, நீங்கள் கேட்டபடி பவர் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறோம் என்ற வாசகங்கள் உள்ளது என்றால்

சரிதான். அந்த 15.02.2011ம் தேதியிட்ட பொது அதிகாரப்பத்திரத்தின் படி 4ம் பிரதிவாதி சின்னசாமி சொத்தை யாருக்கேனும் 2011ம் ஆண்டில் விற்றாரா என்றால் இல்லை. அவ்வாறு பொது அதிகாரப்பத்திரத்தின் பேரில் 4ம் பிரதிவாதி சொத்தை யாருக்கும் விற்கப்படாத நிலையில் பி.வா.சா.ஆ 9 ரசீது ஏற்பட வாய்ப்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல. 15.02.2011ம் தேதியிட்ட பொது அதிகாரப்பத்திரத்தில் பக்கம் 4ல் இரண்டாவது பாராவில் இதற்காக எவ்விதமான பிரதிப் பிரயோஜனமும் பெற்றுக்கொள்ளவில்லை என்ற வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான்.

6. நானும் 4ம் பிரதிவாதியும் சேர்ந்து குற்ற எண்ணத்துடன் போலியாக பொது அதிகாரப்பத்திரத்தையும், ரசீதையும் ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த பொது அதிகாரப்பத்திரம் மற்றும் ரசீது ஆவணங்களில் கண்ட முத்திரைத்தாள்கள் 14.02.2011ம் தேதியில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முத்திரைத்தாள்கள் அடுத்தடுத்த எண்களாகத்தான் உள்ளது என்றால் சரிதான். வாடகை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்ய வேண்டி வாதியையும், 1 முதல் 3 பிரதிவாதியையும் 4ம் பிரதிவாதி அழைத்து சென்று போலியாக பொது அதிகாரப்பத்திரத்தையும் மற்றும் ரசீதையும் எழுதி பெற்றுள்ளார் என்றும் அதற்கு நான் உடந்தையாக இருந்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 ரசீதில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்ற விவரம் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல சின்னசாமி பணம் எதுவும் வாதிக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் கொடுக்கப்படாததால்தான் அந்த ரசீதில் தொகை எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் சொத்து சம்பந்தமாக கிரைய

ஒப்பந்த பத்திரம் மற்றும் கிரையப்பத்திரம் போடப்பட்ட விவரம் எனக்கு எதுவும் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை யார் தயாரித்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை நான் சொல்லவில்லை. எனக்கு படித்துக் காண்பித்த பிறகு நான் கையொப்பம் போட்டேன். பின்பு தாவா சொத்தை யார் யாருக்கு கிரையம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது, 4ம் பிரதிவாதி சின்னசாமி அவரது மகன் 5ம் பிரதிவாதி மகேந்திரனுக்கு கிரையம் கொடுத்ததாக 4ம் பிரதிவாதி சொல்லி எனக்கு தெரியும். நான், 4ம் பிரதிவாதி சின்னசாமி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.25 19:02:04 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**